# கருஞ்சட்டைத் தமிழர்


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூன் 22, 2019 Weekly E-paper • JUNE 22, 2019




## தண்ணீர்-தண்ணீர்...

மா.உதயகுமார்




## வாசுகி பாஸ்கர்

மு. தமிழ்மறவன்

## பாஸ்கர் கவனத்திற்கு

மு. மாறன்



## தடம்மாறும்...

'பைந்தமிழ்' பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஜூன் 22, 2019 Weekly E-paper ● JUNE 22, 2019


# தண்ணீர்... தண்ணீர்...



● மா.உதயகுமார்

ஈரோடு நகர்மன்றத் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்கள் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைக் குடிநீர்க்குழாயின் மூலம் வழங்க வீட்டிற்கு ஒரு குடிநீர்க் குழாய்த் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக ஈரோட்டில் செயல்படுத்தினார். 26.05.1919-இல் ஒவ்வொரு வீட்டிற்கும் இரும்புக் குழாய் மூலம் தடையில்லாக் குடிநீரை வழங்கினார். இந்தத் தொலைநோக்குத் திட்டத்தால் பயன்பெற்ற ஈரோட்டு மக்கள், நூற்றாண்டு நிறைவையொட்டி ஈரோடு வ.உ.சி பூங்காவில் கூடி, தந்தை பெரியாருக்கு நன்றி செலுத்தினார்கள்.

தந்தை பெரியார் அவர்களிடம் தொலைநோக்குப் பார்வை இருந்தது. ஆனால் 2019-இல் தமிழகத்தை ஆட்சி செய்பவர்களிடம் இருப்பதோ தொலைவில் இருக்கும் டில்லியை நோக்கிய பார்வை.

"தண்ணீர்... தண்ணீர்..." என்கிற வார்த்தைகளே எல்லோர் உதடுகளிலும் ஊறுகின்றன. வறண்ட ஏரிகளின் புகைப்படங்களே நாளிதழ்களில் அச்சேறுகின்றன.

மழைப் பொய்த்துவிட்டது என்று பொதுவாகச் சொல்லுவார்கள். இல்லை. ஆட்சியாளர்களே இங்கு பொய்த்துவிட்டார்கள் என்பதை மழை மெய்ப்பித்துவிட்டது.

தண்ணீர்த் தட்டுப்பாட்டால் மக்கள் தவிக்கிறார்கள். இவர்கள் கட்சித் தலைமைக்குத் தவிக்கிறார்கள். இவர்களுக்கும் மேலே இருப்பவர்கள் இன்னும் ஒரு படி மேலே போய் இந்தியைத் திணிக்கிறார்கள். யாகம் நடத்தினால் மழை வரும் என்று சொன்னதைப் போல, இந்தி பேசினால் தண்ணீர்த் தாகம் தீர்ந்துவிடும் என்று கூடச் சொல்வார்கள்.

மக்களவையில் எழுச்சித் தமிழர் திருமாவளவன் அவர்கள் காவிரி உரிமை பற்றிப் பேசுகிறார், கர்நாடகாவைச் சேர்ந்தவர் உடனே எழுந்து ஏசுகிறார். எங்கள் உரிமையைக் கேட்பதற்குக் கூட வாயைத் திறக்கக் கூடாது என்று சொல்பவர்கள் எப்படித் தண்ணீரைத் திறந்து விடுவார்கள்?

தண்ணீர்ப் பிரச்சினை இந்தியா முழுதும் இருக்கிறது. ஆனால் மத்திய அரசு "ஒரே நாடு ஒரே தேர்தல்" பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறது. மக்களுக்கு தண்ணீர்த் தாகம். மத்தியில் இருப்போர்க்கு அதிகார தாகம்!

இந்த ஒரு மாதத்தில் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆலோசனை வழங்காதவர்களே இல்லை என்று சொல்லலாம். சமூக ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், காட்சி ஊடகங்கள் என எல்லாவற்றிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு பற்றியும், தண்ணீர் மேலாண்மை பற்றியும் அறிஞர்கள், வல்லுநர்கள் பல ஆலோசனைகளை வழங்கினார்கள். இவற்றையெல்லாம் முறையாகத் தொகுத்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அமைச்சர்கள், 'தண்ணீர்த் தட்டுப்பாடு என்பது வதந்தி' என்று சொன்னால், ஆடு மாடுகளுக்குக் கூட ஆத்திரம் வரும்.

பணம் படைத்தவர்கள் எல்லாம் தண்ணீர் விலையை உயர்த்தினார்க்ள். எளிய மக்கள்தான் வெயிலின் தாக்கத்தால் உலர்ந்துபோனார்கள். இருக்கிற தண்ணீரைக் கூட இந்த அரசால் அனைத்துத் தரப்பினருக்கும் சரியாகப் பகிர்து கொடுக்க முடியவில்லை. முடியவில்லை என்பதைவிட எந்த முயற்சியும் செய்யவில்லை.

அரசு தனது கடமையைச் சரியாகச் செய்திருந்தால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்காது என்பது அனைத்துத் தரப்பினருடைய கருத்து. கடமையில் மட்டும் தவறவில்லை, அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என அனைத்திலுமே தவறிவிட்டது அதிமுக அரசு.

●

# வாசுகி பாஸ்கர் அவர்களுக்கு!

● மு.தமிழ் மறவன்




"நீங்கள் யார்" என இரஞ்சித்தைப் பார்த்து அய்யா சுப.வீ கேள்வி எழுப்பினால் இரஞ்சித்தான் பதிலளித்திருக்க வேண்டும்.

ஆனால், திடீரெனக் குறுக்கே வந்து பாய்ந்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி!

நீங்கள் பா.இரஞ்சித்திற்கு ஆதரவாக வக்காலத்து வாங்கியிருப்பதில் மிகைத்திருப்பது..,

பா.இரஞ்சித் மீதான பாச உணர்வா அல்லது ஆதரவா?

திராவிட இயக்கத்தின் மீதான காழ்ப்புணர்வா?

நிச்சயமாக, திராவிட இயக்கத்தினர் மீதான காழ்ப்புணர்வே என்பேன்.

ஏனெனில், பா.இரஞ்சித் மீதான பற்றோ அல்லது அவர் பேசிய பேச்சின் மீதான ஆதரவோ உங்களுக்கு இருக்குமானால் நீங்கள் அய்யா சுப.வீ அவர்களுக்கு முதலில் பதில் எழுதியிருக்க மாட்டீர்கள்.

அதற்கும் முன்பாக தோழர் வன்னியரசு அவர்களுக்குத்தான் பதில் எழுதியிருப்பீர்கள்.

அய்யா சுப.வீ அவர்களோ "இரஞ்சித் நீங்கள் யார்?" என்று கேட்டது மட்டுமின்றி..,

"தானுண்டு, தன் வேலையுண்டு என்று திரைப்படங்களை மட்டும் இயக்கிக் கொண்டு, தனக்குக் கிடைத்துள்ள புகழைப் பணமாக்கிக் கொண்டு வாழும் தன்னலவாதியில்லை இரஞ்சித். சமூகச் சிந்தனையோடு பல நேரங்களில் குரல் கொடுப்பவர். அதுவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, வெளிப்படையாக வெளியில் வந்து தன் கருத்துகளை வெளியிடும் போர்க்குணமுடையவர். தன் படத்தில் வரும் வில்லனை ஒரு இராம பக்தனாகக் காட்டக்கூடிய அளவிற்குத் துணிச்சல் உள்ளவர். படங்களை இயக்குவதோடு நின்றுவிடாமல், 'பரியேறும் பெருமாள்' போன்ற தரமான படங்களைத் தந்திருக்கும் தயாரிப்பாளர்.

சமூகநீதிக் கோட்பாட்டில் ஈடுபாடு உடையவர்கள், இயக்குனர் ரஞ்சித்தைப் பாராட்டுவதற்கு இவற்றை விட வேறு தகுதிகள் என்ன வேண்டும்?" என அய்யா சுப.வீ இரஞ்சித்தை மனதாரப் பாராட்டிய வரிகள் மட்டும் உங்கள் கண்களுக்கே தெரியாமல் போய்விட்டதா? அல்லது கவனமாக மறைத்து விட்டீர்களா?

வன்னியரசு அவர்களோ "இரஞ்சித் ஓர் RSS இன் கையாள்" என்று நேரிடையாகவே குற்றம் சாட்டியிருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இரஞ்சித் குறித்த தோழர் வன்னியரசு அவர்களின் குற்றச்சாட்டுக்கு கள்ள மவுனம் காப்பதும், "நீங்கள் யார்?" எனக் கேட்ட சுப.வீ அவர்களை எப்படிக் கேட்கலாம் எனக் கேட்டு அலறுவதும் ஆகப்பெரிய நகைமுரண்.

வாசுகி பாஸ்கர் அகராதியில் "நீங்கள் ஒரு RSS கையாள்" என்பது தவறில்லை போலும்!

"நீங்கள் யார்?" எனக் கேட்பதுதான் மாபெரும் குற்றம்!!

பெரியாருக்கும், நீதிக்கட்சிக்கும் ஏதோ பெரிய முரண்பாடு இருந்ததைப் போல் காட்ட முனைந்திருக்கிறீர்கள். அதைக் குறித்த வரலாற்றுச் செய்திகளை நிச்சயமாக என் அடுத்த முகநூல் பதிவில் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறேன்.

தற்போது, உங்கள் இரஞ்சித் ஆதரவு என்பது எப்படிப்பட்ட தன்மை கொண்டது என்பதை தலித் தோழர்களுக்கும், சமூகத்திற்கும் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயத்தை உண்டாக்கியிருக்கிறீர்கள்.

தோழர் வன்னியரசு பேசியதைப் போல் ஒருக்கால் திராவிட இயக்கத்தவர்களோ, அய்யா சுப.வீ அவர்களோ பேசியிருந்தால் வன்னியரசுவிடம் அமைதி காப்பதுபோல் அமைதியாக இருந்திருப்பீர்களா?

நிச்சயமாக வானமே இடிந்து வீழ்ந்தது போல் துள்ளிக் குதித்திருப்பீர்கள்!

உங்களின் சூழ்ச்சி அரசியலை என்றோ எதிர் கொண்டவர்கள் நாங்கள்!

எழுச்சித் தமிழரோடு இணைந்திருந்த காலத்தில் தலித்துகளையும், திராவிட இயக்கத்தையும் பிரித்தாள முயன்ற பா.ம.க வின் அதே லாபியைத்தான் தற்போது இரஞ்சித் மூலம் அரங்கேற்ற முயல்கிறீர்கள்.

தோழர் வன்னியரசுவை விமர்சித்தால் தனக்கிருக்கும் தலித் ஆதரவாளன் எனும் பிம்பம் நொறுங்கி விடும் என அஞ்சுகிறீர்கள்.

தலித் அல்லாத திராவிட இயக்கத்தவர்களை நோக்கிக் கேள்வி எழுப்புவதன் மூலம் தன்னைத் தலித் போராளியாக கட்டமைத்துக் கொள்ள முயல்கிறீர்கள்.

இதன் மூலம் திராவிட இயக்கத்தையும், தலித்துகளையும் பிரித்துவிடலாம் என எண்ணுகிற உங்களின் எண்ணம் ஒருக்காலும் நிறைவேறாது.

இப்போது கேட்கிறேன்..,

"வாசுகி பாஸ்கர், நீங்கள் யார்?"

சுமந்த் சி இராமன், மாலன் போன்றவர்கள் தங்கள் மனத்தளவில் பா.ஜ.கவை ஆதரிப்பார்கள், ஆனால் பொதுவெளியிலோ அ.தி.மு.கவை ஆதரிப்பார்கள்! இதன் மூலம் தங்கள் உண்மையான முகத்தை காட்டாது, தி.மு.க எதிர்ப்பை அ.தி.மு.க கூடாரத்திற்குள் நின்று வெளிப்படுத்துவார்கள்.

இதோ, தற்போது தாங்கள் திராவிட இயக்க எதிர்ப்பை, குறிப்பாக தி.மு.க மீதான எதிர்ப்பை, தலித்துகளின் களத்தில் நின்று வெளிப்படுத்துகிறீர்கள்.

மனத்தளவில் தாங்கள் ஆதரிப்பது யாரை? உங்கள் உள்ளக்கிடக்கை எது?

"நீங்கள் யார்?"

இன்னும் கொஞ்சம் தெளிவாகவே சொல்கிறேன்..

தி.மு.க ஆதரவாளர்களைக் கண்மூடித்தனமாக விமர்சித்த நீங்கள் என்றாவது மறந்தும் எம் தோழர் வேல்முருகனின் தி.மு.க ஆதரவு நிலையை விமர்சிக்காததன் இரகசியம் என்னவோ?

சமூகநீதிக் களத்தில் நேர்மையாகப் போராடுகிற வேல்முருகன் போன்றோரை மென்மையாகப் பார்க்கிற நீங்கள் எங்களிடம் இவ்வளவு கடுமையாக நடந்து கொள்வது ஏன்? உங்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு, 'ராஜாங்கம்' நடத்துவது யார்?

வாசுகி பாஸ்கர் அவர்களே! "நீங்கள் யாருக்கானவர்? உங்கள் அரசியல் யாருக்கானது?"

இன்னும் எவ்வளவோ செய்திகளைச் சொல்ல இயலும்!

வேண்டாம்..!

பார்ப்பனியத்தின் கொடூரமான ஆதிக்கத்திலிருந்து விடுபட அம்பேத்கரிய, பெரியாரிய, மார்க்சியச் சித்தாந்தங்களும், தோழமைகளும் ஒன்றிணைய வேண்டிய தேவையைச் சிதறடித்து விடாதீர்கள்!

அனைத்து மக்களுக்குமான அருமையான ஆளுமையாக உயர்ந்து நிற்கிற எங்கள் எழுச்சித் தமிழரின்பால் இணைந்து நிற்கிற இளைஞர்களைக் குழப்பி, மீன் பிடிக்க முயலாதீர்கள்!

அய்யா சுப.வீ அவர்களையும், திராவிட இயக்கங்களையும் தலித்துகளுக்கு எதிரானவர்களாய்க் கட்டமைக்கிற சூழலைத் தொடர்ந்து முன்னெடுப்பீர்களானால் "நீங்கள் யார்?" என்பதைத் தனியாகக் கேட்க வேண்டியதிருக்கும்! ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

# பாஸ்கரின் கவனத்திற்கு

● மு.மாறன்

வாசுகி பாஸ்கரின் மேலான கவனத்திற்கு,

தோழர் சுபவீ அவர்களுக்குப் பதில் அளிக்கிறேன் என்ற பெயரில் திராவிட இயக்க எதிர்ப்பு நஞ்சை விதைப்பதின் மூலம் நீங்கள் யார் என்பதை உணர்த்தி விட்டீர்கள்.

உங்களைப் போன்றோருடைய நோக்கத்தில், சமீபகாலங்களில் திராவிட இயக்கத்திற்கு எதிராகத் தலித் அமைப்புகளைக் கட்டமைக்கக் கூடிய முயற்சிகள் நடந்த வண்ணம் உள்ளது.

அதே சமயம் பெரியார், அம்பேத்கரை நேர் எதிர்த் திசையில் சிண்டுமுடியும் பார்ப்பனப் புத்தி இவையெல்லாம் அறிஜீவிகள் மத்தியில் பல்லிளிக்கிறது.

ஆதி திராவிடர் பெயர்க் காரணம் !

பறையர்,பள்ளர் போன்ற தமிழ்க் குடிகளை ஆதித்தமிழர் என அழைக்காமல் 'ஆதி திராவிடர்' என ஏன் அழைக்கிறார்கள்?

இதுதான் திராவிடம் செய்த சதி எனச் சிலர் வரலாற்றைத் திரித்துக் கதை சொல்லிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் உண்மை என்ன?

பிரிட்டிஷ் இந்தியா காலகட்டத்தில் மதராஸ் மாகாணச், சட்டசபையில் 20 ஜனவரி 1922 இல் M.C.ராசா ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

அந்தத் தீர்மானத்தின்படி, பறையர், பள்ளர் என்ற பெயர் நீக்கப்பட்டு ஆதிதிராவிடர் என்ற பெயர் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசாணை எண் 817 (25.03.1922) பறையர், பள்ளர் மக்களுக்கு ஆதிதிராவிடர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பெயர் மாற்றம் செய்யப்பட்டு 2ஆண்டுகளாகியும் பல பத்திரப் பதிவு அலுவலகங்களில் பறையன், பஞ்சமன் என்றே பதிவு செய்யப்படுகிறது.

இதை அரசு உடனே தடுத்து நிறுத்த வேண்டும் என இரட்டைமலை சீனிவாசன் 25.08.1924 இல் சட்டசபையில் முறையிட்டார். உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அன்றைய முதல்வர் பனகல் அரசர் பதிலளித்தார்.

இந்தக் காலகட்டத்தில் (1925 வரை) பெரியார் காங்கிரசில் இருந்தார்.

நீதிக்கட்சி 'ஆதிதிராவிடர் 'என பெயர் மாற்றிய தீர்மானத்திற்கும், பெரியாருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

1892இல் ஆதி திராவிடர் என்ற வார்த்தையைப் பதிவு செய்தவர் அயோத்திதாசர்.

1.12.1891 இல் பண்டிதர்அயோத்திதாசர் நீலகிரியில் திராவிட மகா சபையின் முதல் மாநாட்டைக் கூட்டினார்.

அதில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றி ஆங்கில அரசுக்கும், காங்கிரஸ்கட்சிக்கும் அனுப்பிவைத்தார்.

1892இல் அதை, "ஆதிதிராவிட மகாசன சபை" எனப் பெயர் மாற்றிப் பதிவும் செய்தார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு நீதிக்கட்சி ஆட்சியில் 1922 இல் பள்ளர், பறையர் என அழைக்கப்பட்ட சாதிகளுக்கு "ஆதிதிராவிடர் " என அரசு அதிகாரப்பூர்வமாகப் பெயர் சூட்டியது.

M.C.ராஜா பட்டியல் சமூகத்தைச் சார்ந்தவர். அவர் தன்னுடைய சமூகத்தின் பெயரை எப்படி அழைக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்டவரின் மனநிலையிலிருந்து முடிவெடுத்தார்.

அதற்கு உறுதுணையாக இருந்தது தாத்தா இரட்டைமலை சீனிவாசன்.

எதிர்காலத்தில் நீதிகட்சியிலிருந்து திராவிடர்கழகம் பிறக்கும் என்ற 'ஜோசியத்தை' M.C.ராஜா அறிந்திருக்க வாய்ப்பு இல்லை

வரலாற்றைத் திரிக்கும் சிலர் சொல்வதுபோல ஆதி திராவிடர் என்ற பெயர் திராவிட கழகங்களால் கொடுக்கப்படவில்லை. 1891 இல் அயோத்திதாசரால் கொடுக்கப்பட்ட பெயர்.

அப்போது பெரியாருக்கு வயது 12.

'ஆதி திராவிடர்' எனப் பெயர் மாற்றும்போது இந்தியா என்ற ஒரு சுதந்திர நாடே அப்போது கிடையாது. தமிழ்நாடு என்றவொரு மாநிலமும் அப்போது இல்லை. திராவிடக் கட்சிகள் அப்போது பிறக்கவே இல்லை.

அப்போது பிறக்காத திராவிட இயக்கங்களை இழுத்து, அவர்கள்தான் ஆதித்தமிழருக்கு ஆதி திராவிடர் எனப் பெயர் சூட்டியதாகப் பொய்யைச் சொல்லி வரலாற்றைத் திரித்து அரசியல் செய்வது தற்போது நடக்கிறது. ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## பெரியாரே ஆயுதம் !

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்கும் நேரத்தில் "பெரியார் வாழ்க" என்று முழங்கிய போது, அதிர்ந்துபோன பாஜக உறுப்பினர்கள் ஜெய்ஸ்ரீராம் என்று எதிர்முழக்கம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

வெறும் 37 தமிழக உறுப்பினர்களின் முழக்கங்களுக்கே பதறுகிறது பாஜக என்றால், அந்த முழக்கங்களின் மூலம் தந்தை பெரியார் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்துவிட்டார் என்பது உறுதியாகிறது.

அதனால்தான் தமிழகத்தின் 37 கண்டு, இந்தியாவின் 303 அதிர்ந்து நிற்கிறது.

தந்தை பெரியாரின் தாடியில் இருக்கும் ஒவ்வொரு முடியும் கூடப் பார்பனியத்தை எதிர்க்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்.


பெரியார், அவரின் கொள்கைகளை மீறி இந்தத் தமிழக மண்ணில் எந்தத் தாமரையும் மலரமுடியாது என்பதைக் கடந்த தேர்தல் உறுதி செய்து விட்டது.

சமூக நீதிக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ், பாஜக, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, மக்களுக்கெதிரான பாசிசத்தைக் கட்டவிழ்த்து விடலாம்.

அப்பொழுது...

அதற்கெதிரான மிகப்பெரிய தற்காப்பு ஆயுதம் தந்தை பெரயார் தான்.

'கலைஞரின் நெஞ்சுக்கு நீதி'
தொடர் சொற்பொழிவு – பொழிவு 9



சுப. வீரபாண்டியன்
உரையாற்றுகின்றார்

27.06.19 - வியாழன் - மாலை 6-30 மணி
பெரியார் திடல், சென்னை - 8

●கருஞ்சட்டைத் தமிழர் ● ஜூன் 22, 2019

# தடம் மாறும் இரயில்கள்

'பைந்தமிழ்' பாபு

இந்தியா விடுதலை பெற்ற 1947-இல் மொத்தம் 42 இரயில்வே அமைப்புகள் இருந்தன. அவை அனைத்தும் 1951-இல் தேசியமயமாக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட பொழுது உலகின் மிகப்பெரிய வலையமைப்புகளில் ஒன்றாக உருவானது இந்திய இரயில்வே.



இத்தகைய சிறப்புமிக்க இரயில்வே துறையில், கடந்த ஆட்சியின் போதே சிறிது சிறிதாகப் பல்வேறு பணிகளைத் தனியாரிடம் ஒப்படைத்து வந்த மோடியின் பாஜக அரசு, இப்போது ரயில்வே துறையை முற்றிலுமாகத் தனியாருக்குத் தாரை வார்க்க முடிவு செய்துள்ளது.

சென்ற முறை பாஜக ஆட்சிக்கு வந்ததிலிருந்தே இரயில்வே துறையை தனியார் மயமாக்க வேண்டும் என்று மோடி கருதிக் கொண்டிருந்த போதிலும், நாடு முழுவதுமுள்ள தொழிற்சங்கங்கள் இரயில்வே துறை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு காரணமாகவும், நாடாளுமன்றத்தில் பாஜகவுக்குப் போதிய பலம் இல்லாத காரணத்தாலும் நிறைவேற்ற முடியாத நிலை இருந்தது. ஆனால் தற்போது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் இரண்டாம் முறை ஆட்சியைக் கைப்பற்றியுள்ள மோடி தலைமையிலான பாஜக அரசு இரயில்வேயைத் தனியார் மயமாக்குவதில் ராக்கெட் வேகத்தில் செயல்பட்டு வருகிறது.

100 நாட்களில் ரயில்வே துறையை தனியார்மயமாக்கப் பாஜக அரசு ரயில்வே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. அதன்படி கடந்த ஜூன் 18 ஆம் தேதி டெல்லியில் நடைபெற்ற ரயில்வே ஆணைய உறுப்பினர்கள், பொது மேலாளர்கள் கூட்டத்தில் மத்திய அரசின் முடிவை உடனே நடைமுறைப்படுத்த ரயில்வே அமைச்சர் பியுஸ்கோயல் உத்தரவிட்டுள்ளார்.

முதல் கட்டமாக ஒரு வழித்தடத்திலான பயணிகள் இரயிலையும், சுற்றுலா பகுதிக்கான ஒரு இரயிலையும் தனியார் இயக்க அனுமதி வழங்கப்பட உள்ளது. இதற்கான ஏலம் 100 நாள்களுக்குள் நடைபெறும். ஏலத்தில் அதிகத் தொகை கேட்பவருக்கு ரெயில் சேவையை இயக்க வாய்ப்பு வழங்கப்படும். அந்தத் தனியார் ரெயிலுக்குப் புதிய பெயரைச் சூட்டிக் கொள்ளலாம். ரெயில் என்ஜின் மற்றும் பெட்டிகள் வாடகை அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்படும். மேலும், முக்கிய நகரங்களை இணைக்கும் நீண்ட தூர எக்ஸ்பிரஸ் இரயில்களில் ஒன்றும் விரைவில் அந்த தனியாருக்கு வழங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டிலேயே மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனமான இந்திய ரயில்வேயைக் கைப்பற்றி விட ரிலையன்ஸ், டாடா உள்ளிட்ட பல கார்ப்ரேட்டுகள் பல காலமாகக் காத்திருக்கிறார்கள். காரணம், இந்தியாவில் நாள்தோறும் கோடிக்கணக்கான மக்கள் ரயில் போக்குவரத்தைப் பயன்படுத்துகின்றனர். இதனால் ஆம்னி பேருந்து போல் இரயில் வழித்தடங்களை கைப்பற்றினால் ரயில்களை இயக்குவதோடு மட்டுமல்லாமல் உணவகம், ரயில் நிலையத் தங்குமிடம், சரக்குப் போக்குவரத்து எனப் பலவழிகளில் கொள்ளை லாபம் ஈட்டலாம்.

இரயில்வே தனியார் மயம் எனும் மோடியின் நாசகாரத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் ஏழை எளியவர்களும், நடுத்தர மக்களும் இரயில்களில் பயணம் செய்ய, தற்போதையக் கட்டணத்தைப் போல் இரு மடங்கு செலுத்த நேரிடும். ஏனென்றால் இரயில் கட்டணத்தில் உள்ள 47 விழுக்காடு மானியம் முற்றிலுமாக நிறுத்தப்படும்.

மேலும், இரயில்வே தனியார் மயமாகும் போது, பாதி ரயில்வே ஊழியர்கள் 'உபரி' ஆவார்கள். இதை அமல்படுத்தும் திட்டம் இருப்பதால்தான், மோடி அரசு புதிதாக வேலைக்கு ஆட்களை எடுக்காமல் ஓய்வு பெற்றவர்களைப் பல்வேறு பணிகளில் நியமித்துள்ளது. ஊழியர்களே உபரி ஆகும் போது, ஓய்வு பெற்றவர்களும் நீக்கப்படுவார்கள்.

இது குறித்துச் செய்தியாளர்களிடம் பேசிய சிஐடியு செயல்தலைவர் ஆர். இளங்கோவன் "ஏற்கனவே பல ஆண்டுகளாகத் தனியாகத் தாக்கல் செய்யப்பட்ட ரயில்வே பட் ஜெட்டைப் பொது பட்ஜெட்டுடன் ஒன்றாக இணைத்தபோதே தொழிற்சங்கங்கள் எச்சரித்தன. காரணம், ரயில்வே மிக விரைவில் தனியாரிடம் போகப் போகிறது; அப்படியிருக்கையில் பட்ஜெட் எதற்கு என்பதுதான்.

தற்போதுள்ள மோடி அரசின் முடிவின்படி, மிக விரைவில் உலகப்புகழ்பெற்ற பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை (ஐசிஎப்), கபுர்தலா ரயில் பெட்டி தயாரிப்பு ஆலை உள்பட பல உற்பத்திப் பிரிவுகளும், பொன்மலை ரயில் என்ஜின் ஆலை, சித்தரஞ்சன் லோகோ ஆலை உள்ளிட்டவையும் தனியாரிடம் ஒப்படைக்கப்படும். இதில் ரயில்வே பணிமனைகளும் அடங்கும்.

இவை அனைத்தும் தனியாரிடம் தாரை வார்ப்பதற்கு முன்பு இந்தியன் ரயில்வே ரோலிங் ஸ்டாக் கம்பெனி என்ற பெயருக்கு மாற்றப்படும். ஒவ்வொரு உற்பத்திப் பிரிவிலும் தனியார் நிறுவனங்களைப் போல் தலைமைச் செயல் அதிகாரிஇருப்பார்.

இவரது பணி லாபத்தை நோக்கி நிறுவனங்களை நடத்துவதே. அதற்குஅவர் ஆட்குறைப்பு உட்பட என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம்.

இதுமட்டுமல்ல, மோடி மீண்டும் ஆட்சிக்கட்டிலில் ஏறிய மூன்றே நாள்களில், அதாவது 3.6.2019 அன்று ரயில்வேக்குச் சொந்தமான சென்னை இராயபுரம் உள்பட நாடு முழுவதும் உள்ள 5 அச்சகங்களை மூடிவிடவும், அதில் உள்ள இயந்திரங்களை விற்றுவிடவும் முடிவு செய்தது.

ரயில்வே அச்சகங்களில் பணிபுரியும் ஊழியர்களை மாற்று இடங்களில் நியமிக்கவும், அச்சக வேலைகளை தனியார்மயமாக்கவும் உத்தரவிட்டுள்ளது.

இதன் அடுத்தகட்டமாக ரயில்வே பள்ளிகளும், ரயில்வே மருத்துவமனைகளும் மூடப்படும் அபாயம் உள்ளது" என்று எச்சரிக்கிறார் ஆர்.இளங்கோவன்.

நாட்டு மக்களின் சொத்தான பொதுத் துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பது தான் இவர்களின் தேசபக்தியோ என்னவோ?

காவிகளின் பிடியிலிருந்து நாட்டையும், கார்ப்பரேட்களின் பிடியிலிருந்து பொதுத்துறை நிறுவனங்களையும் மீட்டெடுத்திட அனைத்து அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், பொதுமக்களும் ஓரணியில் நின்று போராட வேண்டிய தருணமிது! ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.